பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 28 ஞாயிற்றுக்கிழமை 14.12.2025 கதிர் 036

## இது ரகசியம் அல்ல!

ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் மீண்டும் செல்வம்அடைக்கலநாதனின் தலைமை தொடர்பான ☞2

# இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்துக அரசுத் தலைவர் அதிகாரிகளுக்கு பணிப்பு



இடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைமீண்டும்கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்.சேதங்களுக்கானஇழப்பீடுவழங்கும் பணியை விரைவுபடுத்தி, விவசாயம்,மீன்பிடிமற்றும் தொழில்துறைகளை மீட்டெடுக்க துரித நடவடிக்கைகளைமேற்கொள்ளுங்கள். பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும் பணியை டிசம்பர் 25க்கு முன்னர் நிறைவு செய்யுமாறும் அரசுத் தலைவர் அநுரகுமார பணிப்புரை விடுத்தார்.

புத்தளம் மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அரசுத்தலைவர் இதனைத் தெரிவித்தார்.

மாவட்டத்தில் சேதமடைந்த பாதைகள் மற்றும் பாலங்களை சீரமைப்பது குறித்து இங்கு விசேட கலந்துரையாடல் நடைபெற்றதுடன், அந்த நடவடிக்கைகளில் ☞2

## 'தித்வா' பாதித்த காணிகளின் கணக்கெடுப்பு தொடங்கியது

'தித்வா'புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட காணிகள் குறித்துக் கணக்கெடுப்பை நடத்துவதற்குக் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளதாக காணி ஆணையாளர் நாயகம் சந்தன ரணவீர ஆராச்சி தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மண்சரிவுக்கு உள்ளான காணிகளைப் பாதுகாக்கப்பட்ட இடங்களாக மாற்றிய பின்னர், ☞2

## பேரிடர் பாதிப்பைக் கையாள்வதில் ஆளும்தரப்பு சிவில் அமைப்புகளுக்கு ஒத்துழைக்கவேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரிடரின் தீவிரத்தன்மையை உணர்ந்து, அதனை உரியவாறு கையாள்வதில் சிவில் சமூக அமைப்புக்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமே தவிர, அவர்களை சந்தேகக்கண் கொண்டு நோக்கக்கூடாது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

பேரிடரின் பின்னர் இலங்கையின் நிலவரம் தொடர்பில்மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியபிராந்தியபிரதிப்பணிப்பாளர்மீனாக்ஷிகங்குலி வெளியிட்டஅறிக்கையில்இதனைத்தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அண்மையில் 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் தொடர் மண்சரிவினால் இலங்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட இடர்களுக்கு கடல்நீர் மட்ட அதிகரிப்பே பிரதான காரணமாக இருக்கக்கூடும் என காலநிலைசார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது பாதிக்கப்பட்ட பல இலட்சக்கணக்கான மக்களுக்கு அவசியமான உதவிகளைப் ☞2

## இலங்கையர்களுக்கான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்கவே முடியாதது

### அந்நாட்டு உயராணையர் தெரிவிப்பு

'தித்வா' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை உதவி மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு வழங்கிய ஒத்துழைப்புக்களைப் போலவே மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பவும் சீரமைப்பு, மறுவாழ்வுக்கும் உதவுவோம். இலங்கை மக்களுக்காக முன்னிற்கும் எமது அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாகுமென இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

கண்டிக்கு வெள்ளிக்கிழமை பயணம் செய்திருந்த உயராணையர் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றிருந்தார். அதன் பின்னர் ☞6

## அரச அலுவலர்களுக்கு ரூ. 4 ஆயிரம் முற்பணம்

அரசஅலுவலர்களுக்குவருடாந்தம் 4000 ரூபாவுக்கு மேற்படாத விசேட முற்பணத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவினால் இது குறித்த விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

முற்பணம் வழங்கப்படும் ☞2

## இந்தியப் படகுகளின் அத்துமீறலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### மன்னாரில் அரசுத் தலைவர் உறுதியளிப்பு

வடக்கு கடற்பரப்பில் தற்போது அதிகரித்துள்ள இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளை உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசுத் தலைவர் ☞2

## வாழும் உரிமையை உறுதிப்படுத்தும் இடர் முகாமைப் பொறிமுறை தேவை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

வாழ்வதற்கான உரிமை அடிப்படை உரிமைகளில்ஒன்றாகும்.அந்தஉரிமையைப் பாதுகாப்பதற்காக நாம் இப்போதாவது பொறுப்புடன் செயற்பட்டு முறையான இடர் முகாமைத்துவ பொறிமுறையொன்றை ஸ்தாபிக்கவேண்டுமென எதிர்க்கட்சித் ☞6

## டிசெ. 18 நாடாளுமன்றம் கூடுகிறது

இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவியளிப்பதற்குரிய நிதி விடுவிப்புக்காக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் வேண்டுகோளுக்கிணங்க நாடாளுமன்றத்தை டிசெம்பர் 18 வியாழக்கிழமை கூட்டுவதற்கு சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு,செலவுத் திட்டத்தின் நிதி அமைச்சுக்கான குழுநிலை விவாதம் டிசெம்பர் 5 நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இந்த விவாதத்தில் உரையாற்றிய நிதியமைச்சரான அரசுத் தலைவர் அநுரகுமார நாட்டின் அவசர இடர் நிலைமை குறித்து விடயங்களை ☞6

## இனி இது .....

சர்ச்சை எழுப்பப்படும் என்று தெரிகின்றது. இந்தக் கூட்டத்தில் செல்வத்தை கட்சித் தலைமையிலிருந்து உடனடியாக வெளியேற்றவேண்டும் என்று ரெலோவின் உறுப்பினர்கள் மீண்டும் பகிரங்கமாகவே கொந்தளிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஒக்டோபர் மாதம் நடந்த தலைமைக் குழுக் கூட்டத்தில் தான் கட்சியின் தலைமைச் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கிக் கொள்வார் என்றும் கட்சியின் உபதலைவரான ஹென்றி மகேந்திரனே கட்சிச் செயற்பாடுகளுக்குத் தலைமை தாங்கட்டும் என்றும் செல்வம் தெரிவித்திருந்தார். ரெலோவின் கூட்டங்கள், மாநாடுகளுக்கு மட்டுமல்ல ரெலோவைப் பிரதிநித்துவப்படுத்தி எந்தவொரு சந்திப்புக்கோ அல்லது கூட்டங்களுக்கோ தான் செல்லமாட்டார் என்றும் கட்சியின் பிரதிநிதியாக ஹென்றியே அவற்றுக்கும் செல்லட்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், அதன் பின்னர் கட்சியின் நிதிச் செயலாளரையும் அழைத்துச் சென்று இந்திய உயராணையரைச் சந்தித்து, பேரிடரின்போது இந்தியா வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து தமிழ் அரசுக் கட்சியுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நடத்திய சந்திப்பிலும் ரெலோ கட்சியின் தலைவராகக் கலந்துகொண்டிருந்தார். அதுமட்டுமன்றி, கட்சித் தலைமைச் செயற்பாடுகளில் இருந்து தான் ஒதுங்குவார் என்று தலைமைக்குழுவிற்கு செல்வம் உறுதிமொழி வழங்கக் காரணமாக அமைந்த அவர் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளியான ஒலிப் பதிவுகள் பொய்யானவை, வெட்டி ஒட்டித் திரிபுபடுத்தப்பட்டவை என்றும் தெரிவித்திருந்தார். ஆனால், அந்த ஒலிப் பதிவு விடயத்தில் தான் அவசரப்பட்டுத் தவறு செய்துவிட்டார் என்று தலைமைக் குழுக் கூட்டத்தில் அவர் ஒத்துக்கொண்டிருந்தார்.

இப்படிப்பட்ட நிலையில்தான் இன்று தலைமைக் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் செல்வத்தை தலைமைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான அழுத்தம் கட்சியின் உறுப்பினர்களிடமிருந்து வந்தாலும் தலைமைக் குழுவில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் அதனை ஏற்பார்களா என்பது கேள்விக்குறியே. ஒக்டோபர் மாதம் நடந்த கூட்டத்திலேயே செல்வத்தின் தவறுகளை அனுமதித்து அவரைத் தலைவராகக் கொண்டு நடந்த இந்தத் தலைமைக்குழு முழுவதும் ஒட்டுமொத்தமாகப் பதவி விலகவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் வலியுறுத்தியபோதும், ஜனவரியில் பொதுக்குழுவைக் கூட்டி கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தும்வரையில் செல்வம் தலைவராகத் தொடர்வதையே அதிலிருந்த பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரித்திருந்தார்கள். செல்வத்தின் அந்த ஆதரவுக் கோஷ்டியினர் இருக்கும் வரையில் கட்சிக்குள் நீதியான, நேர்மையான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியாது என்பதே எனது கருத்து.

கட்சிக்குள் செல்வத்திற்கு எதிராகப் புரட்சி செய்பவர்கள். செல்வத்தின் தவறுகள் குறித்து மக்கள் முன்வந்து பகிரங்கமாகப் பேசாத வரையில் அவர்களால் செல்வத்தின் மீது அழுத்தம் செலுத்த முடியாத நிலையில் தங்கள் முயற்சியில் அவர்கள் தோல்வியடைவது தவிர்க்க முடியாதது. இன்றைய கூட்டத்தில் செல்வத்தின் தலைமைப் பதவி பறிக்கப்படவேண்டும் என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலரும் சமூக ஊடகங்களில் தங்கள் கருத்துக்களைப் பகிரங்கமாக முன்வைத்து வருகின்றார்கள். செல்வம் பதவியிலிருந்து வெளியேற்றப்படும் வரை இவ்வாறு பொது வெளியில் தாங்கள் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்கவே செய்வார்கள் என்று கட்சி உறுப்பினரும் அரசியல் ஆய்வாளருமான சோதிலிங்கம் என்பவர் பதிவிட்டிருக்கிறார். ஆனால், உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடியவர்கள் ரெலோ தலைமைக் குழுவில் மிகச் சிலரே என்பதால் செல்வத்தின் தலைமைக்கு இன்றைக்கு எந்த ஆபத்தும் வரப்போவதில்லை என்பதே எனது கருத்து...

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## இழப்பீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரித்து இ அந்த சந்தர்ப்பத்திலேயே தீர்வுகளை வழங்க அரசுத் தலைவர் நடவடிக்கை எடுத்தார்.

கலா ஓயா, கீழ் பாலத்தின் கட்டுமானம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், சுற்றுலாத் துறைக்கு அவசியமான வகையில் தற்காலிக பாலம் ஒன்றை அந்த இடத்தில் அமைக்குமாறு பணிப்புரை விடுத்த அரசுத் தலைவர், நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது அதன் அவசியத்தை தெளிவாகப் புரிந்துகொண்டும், முறையான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொண்டும் செயற்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மேலும், பெரும் நிர்மாணத் திட்டங்கள், எந்தவொரு பயனும் இல்லாமல், தேவையான நன்மைகளை அடைய முடியாமல் கைவிடப்பட்டுள்ள விதம் குறித்து இங்கு நினைவு கூர்ந்த அரசுத் தலைவர், கட்டுமானங்களை மேற்கொள்ளும்போது, பிரதேசமாக மாத்திரமன்றி ஒரு நாடு என்ற வகையில் கிடைக்கும் பொருளாதார நன்மைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மாவட்டத்தில் மின்சார விநியோகத்தை சீர் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் குறித்தும் அரசுத் தலைவர் கேட்டறிந்ததுடன், அதனை விரைவாக நிறைவு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நீர் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் குறித்தும் அரசுத் தலைவர் கேட்டறிந்தார். மாவட்டத்தில் கிணறுகளை சுத்தம் செய்யும் பணிகள் திருப்திகரமானதாக இல்லாததால், அதற்காக உள்ளூராட்சி நிறுவனங்கள் அவசரமாக தலையிட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மாவட்டத்தில் பெரும்போக நெல் பயிர்ச்செய்கைக்கு விவசாயிகளை தயார்படுத்துவதற்காக தொடங்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்த அரசுத் தலைவர், பயிர்ச்செய்கைக்கு ஏற்ற சூழலை விவசாயிகளுக்கு விரைவில் உருவாக்கிக் கொடுக்குமாறும் இ மாற்று முறைகளில் கவனம் செலுத்தி இ கைவிடப்படும் விவசாய நிலங்களை இயன்ற அளவில் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய இழப்பீடுகளை டிசம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி நிறைவு செய்யுமாறும், அந்த இழப்பீடுகளை வழங்கும்போது, வனப்பகுதியா? அல்லது சட்டபூர்வமானதா? என்பதை கருத்திற்கொள்ளாமல் இழப்பீடுகளை வழங்குமாறும், வனப்பகுதிகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைத் தடுக்க முறையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

கல்பிட்டி போன்ற பகுதிகளில் மண் வளத்தைப் பாதுகாப்பதற்கான விரிவான வேலைத்திட்டத்தின் அவசியம் குறித்தும் அரசுத் தலைவர் இதன்போது கவனம் செலுத்தினார்.

கால்நடைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நியாயமான இழப்பீடு வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கிய அரசுத் தலைவர், அதற்காக கீழ்மட்டத்தில் துல்லியமான தகவல்கள் தேவை என்றும், அனைத்து கால்நடைப் பண்ணைகளையும் பதிவு செய்வதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் இங்கு சுட்டிக்காட்டினார்.

இடர்நிலைமை காரணமாக மாவட்டத்தில் 627 வீடுகள் முழுமையாகவும், 20,813 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. அந்த மக்களுக்கு அவசியமான இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்துமாறு அறிவுறுத்திய அரசுத் தலைவர், மீள்குடியமர்த்தலின் போது அவர்களை அரச காணிகளில் மீள்குடியேற்றுவதற்கு முன்னுரிமை அளிக்குமாறும், அரச காணியை வழங்க முடியாத நிலைமையில், காணி வாங்குவதற்காக வழங்கப்படும் 05 மில்லியன் ரூபாயை அவர்களுக்கு வழங்குமாறும் அறிவுறுத்தினார்.

மேலும், வீடுகள் முழுமையாக சேதமடைந்தவர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும்போது 50 இலட்சம் மதிப்புள்ள வீட்டின் உரிமையைப் பெறும் வகையில், முறையாக இந்த வேலைத்திட்டத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மீன்பிடித் தொழில் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், சேதமடைந்த மீன்பிடி படகுகளை பழுதுபார்ப்பதற்கு உதவி வழங்குவது, இறால் பண்ணைகளுக்கு நியாயமான இழப்பீடு வழங்குவது மற்றும் வங்கிகள் மூலம் சலுகைக் கடன் வேலைத்திட்டம் ஒன்றை செயல்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

சிலாபம் வைத்தியசாலையின் செயல்பாடுகள் குறித்தும் அரசுத் தலைவர் கேட்டறிந்ததுடன், அடுத்த வாரத்திற்குள் நோயாளிகளை அனுமதிக்கும் பணிகளையும், பல பிரிவுகளின் செயற்பாடுகளையும் ஆரம்பிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பேரிடர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கை ஆளும்தரப்பும் சிவில் சமூக அமைப்புக்களும் போராடி வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீடுகளின்படி நாட்டின் மொத்த சனத்தொகையில் 20 சதவீதமானோர் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு சுமார் 1200 க்கும் மேற்பட்ட மண்சரிவுகளால் வீடுகள், கடைகள், விவசாய நிலங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் ஆளும்தரப்பின் வேண்டுகோளை அடுத்து அவசியமான உதவிகளை வழங்குவதாக சர்வதேச நன்கொடையாளர்கள் உறுதியளித்துள்ளனர். இருப்பினும் அவர்கள் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் அவர்களுக்கு உதவும் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் நேரடி உதவிகளை வழங்கவேண்டும்.

ஏற்கனவே நிலையற்ற வருமானம், உயர்வான கடன், இடர்களுக்கு முகங்கொடுப்பதற்கான இயலுமையின்மை போன்ற பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த நலிவுற்ற சமூகங்களே இப்பேரிடரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக நீண்டகால ஒடுக்குமுறையினால் பாதிக்கப்பட்ட, பொதுவாகவே அத்தியாவசிய சேவைகள் மற்றும் முறையான உட்கட்டமைப்பு வசதிகள் கிடைக்கப்பெறாத மலையகத் தமிழ்ச் சமூகம் இந்த இடர்த்தினால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று புத்தளம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வாழும் நலிவுற்ற சமூகங்களும் மிகமோசமான தாக்கங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றன.

இப்பகுதிகளில் தமிழ்மொழியே அதிகமாகப் பேசப்பட்டாலும், 'தித்வா' சூறாவளி தொடர்பில் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ எச்சரிக்கை அறிவிப்புக்கள் தமிழில் வெளியிடப்படவில்லை.

இலங்கையில் இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் இயற்கை இடர் ஏற்பட்டபோது, அதனைக் கையாள்வதில் சிவில் சமூக அமைப்புக்கள் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்தன. இருப்பினும் அதனை செயற்திறன்மிக்க வகையில் பயன்படுத்தாத ஆளும்தரப்புக்கள், அவர்களை அச்சுறுத்தலாகக் கருதி, அவர்களது பணிகளுக்குப் பல்வேறு வழிகளிலும் இடையூறுகளை ஏற்படுத்தின.

தற்போதைய ஆளும்தரப்பு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியிருக்கும் சூழ்நிலையில், முன்னைய ஆளும்தரப்புக்களினால் அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்ட விதத்தை நினைவுகூர்ந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஆளும்தரப்பு தற்போதைய பாதிப்பின் தீவிரத்தன்மையை உணர்ந்து, இதனை உரியவாறு கையாள்வதில் சிவில் சமூக அமைப்புக்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமே தவிர, அவர்களைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கக்கூடாது என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அரச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளுக்கு முன்பாக 3 மாதங்களுக்குக் குறையாத காலத்திற்கு தொடர்ச்சியான சேவையுடன் கூடிய, குறைந்தபட்சம் விசேட முற்பணம் செலுத்தப்படும் வருடத்தின் இறுதி வரையில் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு நிச்சயமாக இடமளிக்கக்கூடிய தற்காலிக அல்லது ஒப்பந்த அடிப்படையின் மீது சேவையாற்றும் அலுவலர்களும் இதில் உள்வாங்கப்படுவர்.

இம் முற்பணம் தற்காலிக அல்லது ஒப்பந்த அலுவலர்களுக்காக கொடுப்பனவு செய்வதாயின், நிரந்தர அரச அலுவலர் ஒருவர் பிணையாளியாக பிணை முறியொன்றை கையொப்பமிடுதல் வேண்டும். 1977 ஆண்டிலிருந்து விசேட முற்பணம் செலுத்தப்படும் ஆண்டுக்கு முன்னரான ஆண்டு வரை பெற்றுக்கொண்ட ஏதேனும் வங்கிக் கடன்கள்/விசேட முற்பணங்கள் தொடர்பில் தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறிய எந்தவொரு நபருக்கும் விசேட முற்பணம் பெறுவதற்கு உரித்தில்லை.

இம் முற்பணக் கொடுப்பனவானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, அதே வருடத்தின் பெப்ரவரி மாதத்தின் கடைசித் திகதியில் முடிவடைய வேண்டும் என்பதுடன், அத் திகதிக்குப் பின்னர் இக் கொடுப்பனவுகள் செய்யப்படலாகாது. உதாரணமாக 2026 ஆம் ஆண்டுக்கான விசேட முற்பணக் கொடுப்பனவு 2026.01.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2026.02.28 ஆம் திகதியுடன் கொடுப்பனவுகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

இம்முற்பணமானது அரச அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கு 'பி' கணக்கிற்கு பற்று வைக்கப்படல் வேண்டும். இத்தொகையானது சமனான பத்து மாதத் தவணைகளில் ஆண்டொன்றுக்கு 8 சதவீத வட்டியுடன் மீள அறவிடப்பட வேண்டும். அதற்கமைய 4000 ரூபா முற்பணத் தொகைக்காக மாதாந்தம் அறவிடப்படும் 400 ரூபா தவணைக்கான சமமான மாதாந்த வட்டி 14.68 ரூபாவாகும்.

4000 ரூபாவுக்கு குறைந்த முற்பணத் தொகைக்காக விகிதாசார மாத வட்டி அறவிடப்படல் வேண்டும். உரியவாறு தவணைக் கட்டணங்களை அறவிட முடியாதவிடத்து, தவணைக் கட்டணங்களில் நிலுவையான மீதிக்காக நிலுவை வட்டியுடன் சேர்த்து உரிய தவணைக் கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும்.

இந்த அறவீடுகள் அரச அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கு என்பதிலிருந்து வழங்கப்படுகின்ற விழா முற்பணங்களோடு அல்லது ஏனைய முற்பண அறவிடுதல்களோடு சேர்க்கப்பட மாட்டாது. இத்திட்டத்தின் கீழ் முற்பணமொன்றைப் பெற்ற அலுவலரொருவரின் சேவை முடிவுறுத்தப்படுமிடத்து, அத்தகைய அலுவலரிடமிருந்து நிலுவையாகவுள்ள முற்பண மீதியானது (சமனாக்கிய வட்டி உட்பட) அவரின் ஓய்வூதியம்/ஏற்பாட்டு நிதியம்/ பணிக்கொடை அல்லது அவருக்கு கொடுமதியான வேறு ஏதேனும் பணத்திலிருந்தோ, அவர் ஒரு தற்காலிகப் பணியாளராயின் அவரின் கடைசி மாதச் சம்பளத்திலிருந்தோ அறவிடப்படுவதற்கு, குறித்த தாபனங்களில் கொடுப்பனவுகள் மற்றும் தாபனக் கூறுகள் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுரகுமாரவிடம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த எல்லைதாண்டிய அத்துமீறலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தான் தீவிரமாகக் கவனஞ்செலுத்துவார் என அரசுத் தலைவர் பதிலளித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற இடர்ப் பாதிப்புத் தொடர்பான கலந்துரையாடல் நேற்று

தொடர்ச்சி 06ம் பக்கம்....


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ‘தித்வா’ ஒரு நிர்வாகத் தோல்வி

காலநிலை மாற்றத்தின் தீவிர அச்சுறுத்தல்கள் மனித சமூகங்களைத் தொடர்ந்து சோதிக்கும் இக்காலகட்டத்தில், ‘தித்வா’ புயல் இலங்கையின் ஆட்சித் திறனை வெளிப்படையாகச் சோதித்த ஒரு பேரிடராக அமைந்தது. ஆனால் அந்தச் சோதனையில் அரசு வெற்றி பெறவில்லை என்பதே இன்றைய கசப்பான உண்மை. இது இயற்கையின் கோபம் மட்டுமல்ல; நிர்வாக முடக்க நிலை, தாமதமான தீர்மானங்கள், பொறுப்பைத் தள்ளிவைக்கும் அரசியல் நடைமுறைகள் ஆகியவற்றின் கூட்டுத் தோல்வியாகவே ‘தித்வா’ வரலாற்றில் பதியப்படுகிறது.

நவம்பர் இறுதியில் ஏற்பட்ட பேரழிவின் பின்னர், அரசுக்கு எதிரான விமர்சனங்கள் தீவிரமடைந்தன. அதற்கான முதற்கட்டப் பதிலாக, வழக்கம்போலப் பழியை மற்றவர்கள் மீது போடும் முயற்சி தொடங்கியது. வானிலை ஆய்வு திணைக்களம் (Meteorology Department) காலத்துக்கேற்ற எச்சரிக்கைகளை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஆனால் இந்த வாதம் இப்போது முழுமையாகச் சரிந்து விட்டது. இலங்கை வானிலை ஆய்வாளர்கள் சங்கம் (Sri Lanka Association of Meteorologists) வெளியிட்ட அறிக்கையில், நவம்பர் 23 முதல் ‘தித்வா’ தொடர்பான எச்சரிக்கைகள் குறைந்தது 25 முறை அதிகாரபூர்வ நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெளிவுபடுத்தியுள்ளது. அவை பொது எச்சரிக்கைகள் அல்ல; தரவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட அறிவிப்புகள்.

இதன் மூலம் வெளிப்படும் உண்மை ஒன்றுதான்: தகவல் இல்லாமை பிரச்சினை அல்ல; செயலற்ற நிர்வாகமே பேரிடரைப் பெரிதாக்கியது. எச்சரிக்கைகள் இருந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், அது ‘இயற்கை பேரழிவு’ அல்ல; ‘மனிதப் பேரழிவு’ அதற்குக் காரணம் ‘ஆட்சித் தோல்வி’. இந்த வேறுபாடு மிக முக்கியமானது.

இந்த நிர்வாகத் தோல்வி மிகத் தெளிவாக வெளிப்பட்ட இடம் பேரிடர் முகாமைத்துவ நிலையம் (Disaster Management Centre – DMC). நவம்பர் 27, 28 இரு நாள்களும் புயல் உச்சக்கட்ட சேதத்தை ஏற்படுத்தியபோது, தேசிய பேரிடர் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டிய இந்த நிறுவனம் தலைமை இன்றிச் செயலிழந்த நிலையில் இருந்தது. சேதம் பெரும்பாலும் நிகழ்ந்த பின்னரே, நவம்பர் 29 அன்று அதன் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார். இது ஒரு நிர்வாகத் தவறல்ல; இது ஒரு கட்டமைப்புச் சீர்கேடு.

மேலும், பேரிடர் முகாமைத்துவ நிலையம் நேரடியாக அரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் இயங்கும் நிறுவனம் என்பதைக் கருத்தில்கொண்டால், தொழில்நுட்ப நிறுவனங்கள் மீது பழி சுமத்தும் முயற்சிகள் உண்மையான பொறுப்புணர்வாகத் தெரியவில்லை; அரசியல் சேதக் கட்டுப்பாடாகவே தோன்றுகின்றன. வானிலை எச்சரிக்கை என்பது தொடக்கப் புள்ளி மட்டுமே. அதனைத் தொடர்ந்து மக்கள் இடம்பெயர்த்தல், நீர்த்தேக்க முகாமைத்துவம், நிலப் பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள், அவசர சேவை இயக்கம், உள்ளாட்சி நிர்வாகங்களுடன் உடனடி தொடர்பு ஆகியவை செயல்பட வேண்டும். இந்த ஒவ்வொரு கட்டத்திலும் அரசுத் துறை வினைத்திறனுடன் செயலாற்றவில்லை என்பது இப்போது நன்கு புலப்படுகின்றது.

‘தித்வா’வின் விளைவுகள் மனித வேதனைகளோடு மட்டும் நிற்கவில்லை; நாட்டின் பொருளாதார மீட்பையும் கடுமையாகக் குலைக்கின்றன. சமீபத்தில் ‘மூடிஸ்’ (Moody's) வெளியிட்ட எச்சரிக்கை அறிக்கை, இந்தப் புயல் இலங்கையின் கடன் தவிர்ப்புக்குப் பிந்தைய பொருளாதார மீட்பைத் தடுக்கக்கூடும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது. காலநிலை அபாயங்களை முகாமை செய்யும் அரசின் திறன் பலவீனமாக இருப்பதே இதற்கான முக்கிய காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச சந்தைகளில் நம்பிக்கை என்பது எண்களால் மட்டுமல்ல; நிறுவனங்களின் வலிமையாலும் அளவிடப்படுகிறது.

இந்த நிலையில், நவம்பர் இறுதியில் வெளிநாட்டு நாணய கையிருப்பு 6.03 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது. ஒரே மாதத்தில் 183 மில்லியன் டொலர் வீழ்ச்சி. சுற்றுலா வருகை அதிகரித்தும் இந்த நிலை ஏற்பட்டிருப்பது, பிரச்சினையின் ஆழத்தை உணர்த்துகிறது. தேயிலைத் தோட்டங்கள் பாதுகாப்பற்றதாக மாறி, தொழிலாளர்கள் மாதக் கணக்கில் வேலை இழக்கும் சூழல் உருவாகியுள்ளது. “இனி தோட்ட வாழ்க்கை சாத்தியமில்லை” என அரசு முகாமிலிருந்து ஒரு தேயிலைத் தொழிலாளர் கூறிய வார்த்தைகள், ஒரு குடும்பத்தின் கதை அல்ல; ஒரு பொருளாதார அதிர்ச்சியின் சாட்சியம்.

தேயிலை மட்டுமல்ல; ஏற்றுமதி நோக்கிலான இறால் வளர்ப்பு பண்ணைகளும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு டொலரும் முக்கியமான இக்காலத்தில், இந்த இழப்புகள் சேர்ந்து நாட்டை அபாய விளிம்புக்குத் தள்ளுகின்றன.

அரசு அறிவித்துள்ள உதவித் திட்டங்கள் மனிதாபிமானத்தின் அடையாளமாகத் தோன்றினாலும், சரியான சேத மதிப்பீடுகள் இன்றி அளிக்கப்படும் வாக்குறுதிகள் நிதி ஒழுங்கைக் குலைக்கக் கூடியவை. அவசர உதவி, தரவுச் சேகரிப்பு, வெளிப்படையான செலவுக் கணக்கீடு, நாடாளுமன்ற ஒப்புதல் – இவை அனைத்தும் ஜனநாயக நிர்வாகத்தின் அடிப்படை. அவற்றைத் தவிர்த்து செயல்படுவது எதிர்கால நெருக்கடிகளுக்கே வழிவகுக்கும்.

‘தித்வா’ தொடர்பான நிர்வாகத் தோல்விகள் சட்டப் பரிமாணத்தையும் எட்டுகின்றன. அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன. அரசின் ‘காப்பாற்ற வேண்டிய கடமை’ மீறப்பட்டதா என்பதே இப்போது கேள்வி. அரசியல் ஒருமைப்பாடு அவசியம்; ஆனால் அது பொறுப்பிலிருந்து தப்பும் கவசமாக மாறக்கூடாது.

காலநிலைப் பேரிடர்கள் இனி அரிதான நிகழ்வுகள் அல்ல. அவை தொடர்ச்சியான ஆட்சித் சோதனைகள். தொழில்நுட்பம் தோல்வியடையவில்லை; ஆட்சி முறைகளே தோல்வியடைந்தன. ‘தித்வா’ ஒரு திருப்புமுனையாக மாற வேண்டும் – பேச்சுகளில் அல்ல, அமைப்புகளில். எச்சரிக்கைகள் தானாகவே செயல்களைத் தூண்டும் நிரந்தர நடைமுறைகளாக மாற வேண்டும். அரசியல் தலையீடு இன்றி, திறமையான தலைமையுடன் பேரிடர் முகாமைத்துவம் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

இலங்கை இன்று ஒரு ஆபத்தான சந்திப்பில் நிற்கிறது. கடன் தவிர்ப்புக்குப் பிந்தைய மீட்பு முயற்சிகளுக்கும், அதிகரிக்கும் காலநிலை அதிர்ச்சிகளுக்கும் இடையில், தவறுகளுக்கான இடம் இனி இல்லை. அந்த உண்மையை உணர்ந்து செயல்படாவிட்டால், ‘தித்வா’ ஒரு எச்சரிக்கையாக அல்ல; ஒரு முன்னறிவிப்பாகவே வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

# சிலாபம் வைத்தியசாலையில் வெள்ளத்தால் ரூ. 1200 மில். சேதம்

வெள்ளப் பேரிடர் காரணமாக சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் 1200 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சேதம் ஏற்பட்டுள்ளது. இரண்டு முக்கிய கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிலாபம் மாவட்ட வைத்தியசாலையை வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்ட பின்னர் இதனைத் தெரிவித்தார். வெளிநோயாளர் பிரிவு, வைத்தியசாலை வளாகம், மருத்துவ விடுதிகள், மருந்தகம், அவசர சிகிச்சை பிரிவு, ‘ஹீமோடையாலிசிஸ்’ பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு, ஆய்வகம், குருதி வங்கி, ‘எக்ஸ்ரே’ சிகிச்சை பிரிவு, ‘சி.டி ஸ்கான்’ சிகிச்சைப் பிரிவு, மருத்துவக் குடியிருப்புகள், மற்றும் சுகாதார ஊழியர் குடியிருப்புகள் உள்ளிட்ட வைத்தியசாலையின் அனைத்து பிரிவுகளையும் சுகாதார அமைச்சர் நேரில் பார்வையிட்டார்.

இதனைத்தொடர்ந்து வைத்தியசாலையின் எதிர்கால சேவைகளை படிப்படியாக செயல்படுத்துவதற்கான செயற்திட்டம் மற்றும் முக்கிய தேவைகள் குறித்து வைத்தியசாலையின் நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்களுடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

வைத்தியசாலையின் வளர்ச்சிக்காக இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் சுமார் 650 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி வைத்தியசாலையில் தற்போது கட்டுமானத்தில் உள்ள இரண்டு கட்டட தொகுதிகளின் விரைவான அபிவிருத்தி குறித்து சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சுமித் அத்தநாயக்க தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஆளும்தரப்பால் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நன்கொடையாளர்கள் மற்றும் அரச சாரா நிறுவனங்கள் வழங்கும் உதவி மற்றும் மானியங்கள் என்பனவும் வைத்தியசாலையின் கட்டுமானப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# நீர் வழங்கல் சேவையில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அனைத்தும் சீரமைப்பு

நாடு முழுவதும் ஏற்பட்ட பேரிடர் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த நீர்வழங்கல் சேவை, தற்போது முழுமையாகச் சீரடைந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

சபையின் தலைவர், பொறியியலாளர் சந்தன பண்டார செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடரால் சேதமடைந்த நீர்க் கருவிகளுக்குப் பதிலாக, புதிய நீர்க் கருவிகளை எந்தவிதக் கட்டணமும் அறவிடாமல் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை துரிதமாகப் சீரமைத்து, எதிர்வரும் போகத்திற்குத் தேவையான நீரைப் போதுமான அளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் .

முப்படையினரின் உதவியுடன் தற்போது உரிய சீரமைப்புப் பணிகள் –முடிக்கப்பட்டுள்ளன என்றார்.

# உதவிகள் ஆவணப்படுத்தப்படுகின்றன அவை முறையாக விநியோகிக்கப்படும்

## இடர் முகாமைத்துவ அமைச்சு செயலர் தெரிவிப்பு

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் சகல உதவிகளும் பரிசீலிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றன. வழங்கப்படும் சகல உதவிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக விநியோகிக்கப்படுகிறதுதென பாதுகாப்பு அமைச்சின் இடர் முகாமைத்துவ பிரிவின் மேலதிக செயலாளர் தர்மதிலக தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் உதவிப் பொருட்கள் குறித்து தெளிவுப்படுத்துகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கிடைக்கப்பெறும் உதவிகள் முறையாகப் பரிசீலிக்கப்படுகின்றன. நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உலக நாடுகள் வழங்கும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அதனை விடுத்து விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கக்கூடாது.

கிடைக்கப்பெறும் உதவிப் பொதிகளில் உள்ளவை துறைமுகம் மற்றும் விமான நிலையங்களில் சுங்க பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டு அவை முறையாகத் தரப்படுத்தப்படுகிறது. அத்துடன் ஆவணப்படுத்தப்படுகின்றன.

கட்டுநாயக்க விமான நிலைய களஞ்சியசாலை மற்றும் ஒருகொடவத்த களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு சகல பிரதேச செயலக பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. உதவி பெற்றுக்கொள்ளும் தரப்பினரது விவரங்களும் ஆவணப்படுத்தப்படுகின்றன - என்றார்.

# இத்தாலி – இலங்கை நாடுகளிடையே சாரதிப் பத்திர ஒப்பந்தம் புதுப்பிப்பு

இத்தாலி மற்றும் இலங்கைக்கு இடையில் சாரதி அனுமதிப்பத்திரங்களை அங்கீகரிப்பதற்கான இருதரப்பு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் இத்தாலியின் ரோம் நகரில் வெள்ளிக்கிழமை கையெழுத்திடப்பட்டது. இலங்கை ஆளும்தரப்புச் சார்பில் இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் சத்யா ரொட்ரிகோவும், இத்தாலி சார்பில் வெளிவிவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு தொடர்பான பிரதி அமைச்சரும் அரச செயலாளருமான மரியா திரிபோடியும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

2021 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் காலாவதியாகியிருந்த நிலையில், அது முதல் இரு நாடுகளின் மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகாரிகளுக்கிடையில் ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது குறித்து இடம்பெற்ற பேச்சுக்கள் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து இக்கையெழுத்திடல் இடம்பெற்றுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், இரு நாடுகளிலும் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றுக்கொண்ட நபர்கள் தமது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை மாற்றிக்கொள்ள முடியும்.

இந்த ஒப்பந்தம் முதன்முறையாக 2011 ஆம் ஆண்டு இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டதோடு, 2021 இல் காலாவதியாவதற்கு முன்னதாக 2016 இல் புதுப்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டதன் மூலம், குறித்த நாடுகளில் வசிக்கும் மக்கள் 6 வருட காலப்பகுதிக்குள் எழுத்துமூல மற்றும் செய்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்றாமல் தமது சாரதி அனுமதிப்பத்திரத்தை மாற்றிக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது.

இந்த வசதியானது இத்தாலியில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இலங்கையர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். 5 வருட காலத்திற்குச் செல்லுபடியாகும் இந்த ஒப்பந்தம், இரு நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 60 நாட்களுக்குள் நடைமுறைக்கு வரும்.

ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததும் இரு தரப்பினரும் அது குறித்து அறிவிப்பார்கள் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களுக்கு மலையகத்திலேயே காணி உரித்தை கோரிப் பெறத் தயார்

## மனோ கணேசன் அறிவிப்பு

மலைநாட்டில், பேரவலத்துக்குப் பின்னர் எழுந்துள்ள, பாதுகாப்பான வதிவிடக் காணி என்ற உரிமை கோரிக்கையை அரசுடன் உரையாடி பெற ஆளும்தரப்பில் அங்கம் வகிக்கும் மலையக பிரதிநிதிகளுடன் கலந்து பேசி இணைந்து செயற்பட தயார். மலையக சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப சமூக பிரச்சினையை, மனதில் கொண்டு, அவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குப் பாதுகாப்பான வதிவிட காணிகளை அரசிடம் கோரி பெறுவோம், என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஊடக செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:

மலையகத்தில் இதற்கு முன் நடைபெற்ற அவலங்களைவிட இந்த முறை அவலம் அவதானத்துக்கு உரியதென நான் நம்புகிறேன். ஏறக்குறைய பெரும்பாலான மலை பகுதிகளிலும் மலை பாறைகள், மலை மேடுகள், தரை நிலங்கள் வெடித்துள்ளன. வெடிப்பு இடைவெளிகள் ஊடாக நீர் வெளியேறுகின்றது. இது இயற்கை இடர். சிலர் கூறுவதைப் போன்று இதனைக் 'கொங்ரீட்' போட்டுத் தடுக்க முடியாது. இவை இயற்கையான நில வெடிப்புக்களாகும்.

மலைநாட்டில், மலை உச்சி, மண் சரிவு அபாயங்களை உடனடியாக எதிர் கொள்ளும் பிரிவினர் இன்னும் இருக்கிறார்கள். இவர்களின் பிரச்சினை, சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப்பப பிரச்சினை. இவர்களை அடையாளம் கண்டு, இவர்களுக்கு பாதுகாப்பான வதிவிடக் காணிகளை அரசிடம் அவசரமாக கோருவோம்.

இது தொடர்பில் அரசுத் தலைவர் அநுரகுமாரவுடன் நான் கடந்த வாரம் நேரடியாக நாடாளுமன்றத்தில் உரையாடி உள்ளேன். வரவு, செலவுத் திட்டத்தின் இறுதி நாளன்று, எதிர்கட்சிகளுடன் சேர்ந்து வெளிநடப்பு செய்யாமல், அரசுத் தலைவரின் உரையைச் செவி மடுத்தேன். இனிமேல் பொது மக்கள் பாதுகாப்பான இடங்களிலேயே குடியமர்த்தப்படுவார்கள் என அவர் சபையில் தன் உரையில் கூறியதை நேரடியாகப் பாராட்டி, அதே வசதி மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென வலியுறுத்தினேன்.

அதன் பின், எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும், நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக கருத்துக் கூறி அரசுத் தலைவரின் கவனத்துக்கு, காணி பிரச்சினையை மீண்டும் கொண்டு வந்துள்ளார்கள். ஆகவே, இன்று இது தேசிய பிரச்சினையாக மாறி உள்ளதை இனிமேல் எவரும் மறுக்க முடியாது.

பேரவலத்தை அடுத்து, நான் பல இடங்களுக்கு எனது கட்சி குழுவினருடன், உதவி பொருள் உதவிகளுடன், கண்காணிப்பு பயணங்கள் மேற்கொண்டேன். நான் போன கண்டி நாவலபிட்டிய கங்க-இஹல-கோரள-அலுகொல்ல மலை உச்சி தோட்டம், மிகவும், ஆபத்து நிறைந்த பூமியாக என் மனதில் நிற்கிறது.

அங்கே அநாதரவாக இருந்த மக்களுக்கு, நாம் விநியோகித்த உடனடி உதவியைப் பெற்றுக்கொண்ட அவர்கள் தம் வாழ்விட பரிதாப நிலையை எனக்குக் கூறினார்கள். நான் அந்த மலை உச்சியில் மலையேறி நடக்கும் போதே, என் கால்களுக்கு கீழே, தரை பிளந்து, உள்ளே இருந்து நீர் பீறிட்டு வெளியே வருவதை என் கண்களால் கண்டேன்.

மீண்டும் ஒரு மழையோ, மண் சரிவோ வருமானால், கீழே உருண்டு வர தயாராக இருக்கும், பாறைகளையும், உயர்ந்த மண்மேடுகளையும், கண்டேன். இதை விட என்ன பரிதாபம் இருக்க முடியும்? பாதுகாப்பான மாற்றுக் காணிகள் இவர்களுக்கு வழங்க பட வேண்டும். அதுவும் அவசரமாக முன்னுரிமை அடிப்படையில் நடைபெற வேண்டும்.

ஆகவே, அரசியல் கட்சி, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, பேதங்களுக்கு அப்பால் இந்த விடயத்தில் நாம் ஒன்று பட்டு செயற்பட்டு, நமது சமூகத்தில் மிகவும் விளிம்பு நிலையில் வாழும் பிரிவினரின் பரிதாப சமூக பிரச்சினையை, மனதில் கொண்டு, இவர்களை அடையாளம் கண்டு, இவர்களுக்கு பாதுகாப்பான வதிவிட காணிகளை அரசிடம் கோரி பெறுவோம் - என்றுள்ளது.

# மண்சரிவு எச்சரிக்கையில் தளர்வு

இலங்கையின் பல மாவட்டங்களுக்குப் விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய தற்போது கண்டி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் 10 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய தற்போது இரு மாவட்டங்களில் 10 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு மாத்திரமே மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் மெததும்பர, பஹததும்பர, கங்கா இஹலகோரள, தொலுவ, பன்வில, தெல்தோட்டை, உடுதும்பர, மினிப்பே மற்றும் உடபலாத்த பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், குருணாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச செயலகப்பிரிவுக்கும் மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மேலும் 7 மாவட்டங்களில் 58 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மழை வீழ்ச்சி தற்போதைய காலநிலை என்பவற்றை அவதானித்து சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த சிவப்பு எச்சரிக்கை நீக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் பதிவாகக் கூடிய மழை வீழ்ச்சியின் அடிப்படையில் இவற்றில் மாற்றங்கள் ஏற்படக்கூடும். இதேவேளை மேலும் 3 மாவட்டங்களின் 19 பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு முதலாம் நிலை அவதானத்துடனிருப்பதற்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கப்படும் அறிவித்தல்களை தொடர்ந்தும் முறையாக பின்பற்றுமாறு மக்களை கேட்டுக் கொள்கின்றோம். நவம்பர் 20 முதல் தற்போது வரை மண்சரிவு குறித்த ஆய்வினை மேற்கொள்ளுமாறு 3,268 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 618 ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மண்சரிவு ஏற்படுவதற்கான 15 அறிகுறிகளில் ஏதேனுமொரு அறிகுறி தென்பட்டாலும் மக்கள் தமது குடியிருப்புக்களிலிருந்து வெளியேறுவதே பாதுகாப்பானதாகும் – என்றார்.

# 82 நீர்நிலைகள் வான்பாய்கின்றன

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 36 பிரதான நீர்த்தேக்கங்களும், 46-க்கும் அதிகமான நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் தற்போது வான் பாய்ந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் ஹேரத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அநுராதபுர மாவட்டத்தில் அனைத்துப் பிரதான நீர்த்தேக்கங்களும் வான் பாய்கின்றன. அம்பாறை மாவட்டத்தில் 9 நீர்த்தேங்களில் 3 நீர்த்தேக்கங்களும், பதுளை மாவட்டத்தில் 7 நீர்த்தேங்களில் 3 நீர்த்தேக்கங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 நீர்த்தேங்களில் 3 நீர்த்தேக்கங்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 10 நீர்த்தேங்களில் 4 நீர்த்தேக்கங்களும், கண்டி மாவட்டத்தில் 3 நீர்த்தேங்களில் 2 நீர்த்தேக்கங்களும் வான்பாய்கின்றன.

குருநாகல் மாவட்டத்தில் 10 நீர்த்தேங்களில் 4 நீர்த்தேக்கங்களும் மொனராகலை மாவட்டத்தில் 3 நீர்த்தேங்களில் ஒரு நீர்த்தேக்கமும் பொலன்னறுவை மாவட்டத்தில் 4 நீர்த்தேங்களில் 2 நீர்த்தேக்கங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 5 நீர்த்தேங்களில் 3 நீர்த்தேக்கங்களும் மன்னார் மாவட்டத்தில் 4 நீர்த்தேங்களில் ஒரு நீர்த்தேக்கமும் வான்பாய்கின்றன.

நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளைத் திறப்பதன் மூலம் தற்போது வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைந்தபட்ச மட்டத்திலேயே காணப்படுகிறது. எனினும், எதிர்காலத்தில் கிடைக்கும் மழைவீழ்ச்சிக்கு ஏற்ப வான் கதவுகளைத் திறக்கும் அளவு மாறுபடலாம்.

தற்போது வெளியேற்றப்படும் நீரினால் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அபாயமோ அல்லது நீர் மட்டம் அதிகரிப்பதோ அவதானிக்கப்படவில்லையென்றாலும், தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் நீர் வெளியேற்றப்படுவது தொடர்பான அறிவிப்புகள் குறித்துத் தீவிர அவதானத்துடன் இருப்பது மிக முக்கியம் என்றார்.

# ஆயிரத்து 698 நிறுவனங்கள் பேரிடரினால் கடும் பாதிப்பு

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட பேரிடர்காரணமாகப் பாதிக்கப்பட்ட 13,698 வர்த்தக நிறுவனங்கள் குறித்த தரவுகளை தொழில்துறை மற்றும் தொழில் முயற்சி மேம்பாட்டு அமைச்சுக்குச் சொந்தமான தொழில்துறை இடர் ஆதரவு மத்திய நிலையம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடர் ஆதரவு மையத்தில் பெறப்பட்ட பாதிப்புக்குள்ளான வர்த்தகங்களின் விவரங்களை அமைச்சு வெளியிட்டுள்ளது. அதற்கமைய 5,639 நுண்ணிய அளவிலான வர்த்தகங்கள், 4,636 சிறு அளவிலான வர்த்தகங்கள், 2,986 நடுத்தர அளவிலான வர்த்தகங்கள், 437 பெரிய அளவிலான வர்த்தகங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்துறை சார்ந்தவர்கள் தமது சேதங்கள் தொடர்பில் புகாரளிப்பதற்கு, தொழில்துறை நிறுவனங்களுக்காக 071266 6660 என்ற தொலைபேசி எண்ணை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளதுடன், பாதிக்கப்பட்ட தமது வர்த்தகங்கள் தொடர்பான தகவல்களை தொழில் துறையினர் கூடிய விரைவில் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய அனைத்து தகவல்களும் நாளைமறுதினம் செவ்வாய்கிழமை (16) பிற்பகல் 2 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், ழுழுழு.ஷ்ஜ-ர்விமிஷதீ.ஆலிஸ.யிவ என்ற இணையத்தளத்திற்குச் சென்று இணையவழியூடாக தகவல்களைப் பதிவு செய்யலாம் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

மேலும், இந்தச் செயல்முறைக்கான அவசியமான உதவிகளை சம்பந்தப்பட்ட பிரதேசசெயலக அலுவலகங்களிலும், அத்துடன் மாவட்டச் செயலக அலுவலகங்களிலும் கடமையிலுள்ள தொழில்துறை மற்றும் தொழில் முயற்சி மேம்பாட்டு அமைச்சின் அதிகாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது. இதன்போது இந்தவிடயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரசுத்தலைவருடனானகலந்துரையாடல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தின் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள மீனவர்கள் இந்திய இழுவைப்படகுகளால் கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

வடபகுதி கடற்பரப்பு முழுவதும் இந்திய இழுவைப்படகுகளின்அத்துமீறல்செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. இதனால் வடபகுதியைச் சேர்ந்த எமது மீனவர்கள்மீன்பிடியில்ஈடுபடமுடியாதநிலை ஏற்படுகின்றது. எனவே அரசுத்தலைவர் என்ற வகையில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்செயற்பாடுகளைக்கட்டுப்படுத்துவது தொடர்பில் தாங்களே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வடமாகாணத்திலுள்ள நான்கு கரையோர மாவட்டங்களும் இந்த இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலால் பாதிக்கப்படுவதுடன், தீவுப் பகுதிகள் மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக இந்திய இழுவைப்படகுகள் தமது கடற்பரப்பின் எல்லைகளைத் தாண்டி எமது கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுளைவதுடன், எமது கடற்கரையை அண்மித்து தமது கடற்றொழில்செயற்பாடுகளில்ஈடுபடுகின்றனர்.

தங்களுக்கு இந்த விடயத்தினைக் கையாள்வதில் இராஜதந்திர ரீதியாகச் சிக்கல்கள் இருக்கலாம். இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் கவனஞ்செலுத்தி இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசுத் தலைவரிடம் வலியுறுத்தினேன்.

மன்னார்மாவட்டகடற்றொழில்நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளரும் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் தொடர்பாக விளக்கினார். அரசுத்தலைவர்பதிலளித்தபோது,

இந்த விவகாரம் பூகோள ரீதியான ஒரு பிரச்சினை என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இந்தியாவில் தேர்தல் ஒன்று நெருங்கிவரும்போது இந்த விவகாரம் ஒரு பெரும் பிரச்சினையாகத் தலைதூக்கும். அதேபோல் நமது நாட்டிலும் ஒரு தேர்தல் ஒன்று நெருங்கிவரும்போது இந்த பிரச்சினை பெரும் பிரச்சினையாக மாறும்.

இந்தப் பிரச்சினை இருநாடுகளுக் கிடையிலான பிரச்சினை. இருப்பினும் இந்திய இழுவைப் படகுகள் எமது எல்லைக்குள் நுழைவதை நாமே தடுக்கவேண்டும். எமது கடற்பரப்பிற்குள் அயல் நாட்டவர்கள் நுழையாமல்பார்கவேண்டியதுஎமதுகடமை. இதுஎமதுஉரிமைசார்ந்தபிரச்சினையுமாகும்.

இவ்வாறு இந்திய இழுவைப்படகுகள் எல்லை தாண்டி வருவது தொடர்பில் எமது பாதுகாப்புத் தரப்பினர், குறிப்பாக கடற்படையினர்ஏற்கனவேநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும்தொடர்ந்தும் எல்லைதாண்டும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இந்நிலையில், 12.12.2025 யாழ்ப்பாணத்தில் இந்த எல்லை தாண்டிய இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளுக்கெதிராக மீனவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததையும் நான் அறிவேன். எனவே இந்த விவகாரம் குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் – என்றார்.

## டிசெ. 18.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்காட்டி, 500 மில்லியன் ரூபா நிதி விடுவிப்புக்காக குறைநிரப்பு பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார் என்று குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தை கூட்டுவது குறித்து சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவினால் பிரசுரிக்கப்பட்டுள்ளவர்த்தமானிஅறிவித்தலில்,

பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க நாடாளுமன்றத்தின் 13 ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2025.12.18 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு அழைப்பாணை விடுக்கிறேன் என்பதை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன ஆகிய நான் இதன் ஊடாக அறிவிக்கிறேன்' என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையர்களுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘தித்வா’ புலயால் இலங்கை எதிர்கொண்டுள்ள பேரழிவிலிருந்து மீள்வதற்கு இந்தியா முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளித்தோம். நாம் எவ்வாறு ஒரு கூட்டுறவு மனப்பான்மையுடன் இணைந்து செயல்படுவோம் என்பதையும் விளக்கினோம்.

இதுவரை உதவி மற்றும் மீட்பு முயற்சிகளுக்குவழங்கியஒத்துழைப்புக்களைப் போலவே மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பவும் சீரமைக்கவும் உதவுவோம். மக்களின் மறுவாழ்வுக்கும் உதவுவோம். இலங்கை இந்தப் பேரழிவை எதிர்கொண்ட முதல் நாளிலிருந்தே உதவி செய்ய முன்வந்த நாடு இந்தியாவாகும். அதிர்ஷ்டவசமாக இந்திய விமானந் தாங்கிக் கப்பல்அன்றைதினம்கொழும்புதுறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்தது. அவற்றிலிருந்த உலங்கு வானூர்திகளை உடனடி உதவிச் சேவைகளில் ஈடுபடுத்தினோம். அதைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து தொடர்ச்சியாக உதவிகள் வந்தன. உதவிப் பொருட்களை ஏற்றிய ஏழு கப்பல்களும், ஒன்பது விமானங்களும் இதுவரை இலங்கையை வந்தடைந்துள்ளன.

மீட்பு பணிகள், உதவிகள் மாத்திரமின்றி மின்சார இணைப்புக்களை மீள வழங்குதல், பாலங்கள் மற்றும் வீதிகளைப் சீரமைத்தல் என்பவற்றையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். மஹியங்கனையில் தற்காலிக மருத்துவமனை அமைக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இலங்கை ஆளும்தரப்பின் கோரிக்கைக்கமையமேலுமொருவிமானமும், கப்பலும் இந்தியாவிலிருந்து வரவுள்ளன.

மிகவும் அத்தியாவசியமான மற்றும் பற்றாக்குறையாக உள்ள சில மருந்துகள் டெல்லியில் உள்ள இலங்கை உயராணையரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவை ஓரிரு நாட்களில் நாட்டை வந்தடையும். அடுத்த கட்டமாக இலங்கை ஆளும்தரப்புடன் இணைந்துமறுவாழ்வுமற்றும்சீரமைப்புக்கான ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

இவ்வாறுநாம்இலங்கைஆளும்தரப்புடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்படுகிறோம். இலங்கை மக்களின் தேவைகளுக்கு ஏற்பவே அனைத்தும் செய்யப்படும். அவர்களுக்கே எமது முன்னுரிமை. இலங்கை மக்களுக்காக முன்னிற்கும் எமது அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாகும் – என்றார்.

இந்திய உயராணையர் மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் இடையிலான சந்திப்பின்போதும் ‘தித்வா’ புலயால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியா வழங்கிவரும் ஒத்துழைப்புக்கள் குறித்து உயராணையர் விளக்கமளித்தார்.

‘தித்வா’ புயலை அடுத்து ‘சாகர்பந்து’ நடவடிக்கையின் கீழ் இலங்கையில் இந்தியாவால்எவ்வாறானஉதவிமற்றும்மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு உயராணையரால் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் புயலை அடுத்து இலங்கை முழுவதும் முன்னெடுக்கப்படும் மறுவாழ்வு மற்றும் மீட்சி நடவடிக்கைகளுக்காக இந்தியாவின்தொடர்ச்சியானஆதரவுகளுக்காக மகாநாயக்க தேரர்களிடமிருந்து ஆசிகள் வேண்டப்பட்டிருந்ததாக கொழும்பிலுள்ள இந்திய உயராணையரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மத்திய மாகாணத்துக்கான தனது இந்தப் பயணத்தின்போது உயர் ஸ்தானிகர், ‘தித்வா’ புயலினால் மிகமோசமாக பாதிக்கப்பட்டதும் 31 உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுமான உடத்தவ, நெலும்மால கிராமத்துக்கும் சென்றிருந்தார்.

## வாழும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

‘தித்வா’ சூறாவளி புயலால் பாதிக்கப்பட்ட மாத்தளைமாவட்டமக்களின்சுகதுக்கங்களை ஆராயும்நோக்கில்எதிர்க்கட்சித்தலைவர்சஜித் பிரேமதாச நேற்று மாத்தளை – ரத்தோட்டை கைகாவல பகுதிகளுக்குச் சென்றிருந்தார். அங்கு செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதிக்கப்பட்ட மக்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். எதிர்காலத்தில்அவர்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை நாமனைவரும் சேர்ந்து முன்னெடுக்க வேண்டும். இந்த இலக்கை நோக்கி அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இயற்கை பேரிடர்கள் மற்றும் இடர் நிகழும் போது அவற்றில் இருந்து வரும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இந்தப் பேரிடரின் போது எடுக்கப்பட்டதா இல்லையா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. வளிமண்டலவியல்திணைக்களமும், வானிலை ஆய்வாளர்களும் கடந்த 11ஆம் திகதி முதல் வானிலை நிலைமை படிப்படியாக மோசமடைந்து வருவதாக படிமுறை படிமுறையாக நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்து வந்தனர்.

10 நாட்களில் இது புயலாக உருவெடுக்கும் என்றும் முன்னறிவித்தல் விடுத்திருந்தனர். இந்தக் காலகட்டத்தில், மக்களை வெளியேற்றவும், மக்கள் மீது வரும் பாதிப்புகளைக் குறைக்கவும், இடர் முன்னாயத்தத்திட்டங்களைமுன்னெடுக்கவும், இடர்களால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை, பிரதேசங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் இயலுமை காணப்பட்டது. ஆனால் இதனை எதிர்கொள்வதற்குத் தேவையான இடர் முகாமைத்துதிட்டமொன்று இந்த ஆளும்தரப்பிடம் இருக்கவில்லை. எனவே நாட்டுக்கு புதிய இடர் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று அவசியம்

புத்தளம்மற்றும்பொத்துவில்பிரதேசங்களில் ‘டாப்ளர் ரேடார்’ கட்டமைப்புகளை நிறுவி, நவீன உபகரணங்களுடன் கூடிய வானிலை முன்னறிவிப்புகளை வெளியிடும் திறனும் இயலுமையும் கொண்ட பிராந்திய சர்வதேச மையமாக நமது நாட்டை மாற்ற வேண்டும்.

நாடு சுனாமி மற்றும் சூறாவளிகளால் பாதிக்கப்பட்டது. காலநிலை மாற்றம், சீரற்ற வானிலை காரணமாக பல பாதிப்புகளுக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம். எனவே இடர் முகாமைத்துவக் கொள்கையை புதுப்பிக்க வேண்டிய தேவை எமக்குக் காணப்படுகிறது.

அதேபோல், இடர் முகாமைத்துவத் துறை ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்துச் செயற்படவேண்டும். இடர் முகாமைத்துவ அமைச்சை ஒரு நேரடி அமைச்சகமாக மாற்றவேண்டும். கீழ் மட்டத்தில் இருந்து இடர் முகாமைத்துவ அதிகாரிகளை நியமித்து, ஆபத்தான பகுதிகளை அடையாளம் கண்டு, வலுவான கட்டமைப்பிற்குள் அமைந்த ஒரு திட்டத்தை வகுத்து முன்னெடுக்கவேண்டும்.

இந்த மோசமான வானிலை குறித்து நவம்பர் 11 முதல் பல்வேறு கணிப்புகள் மீண்டும்மீண்டும்கூறப்பட்டுவந்தநிலையில், அரச பொறிமுறை ஏன் இந்த சூழ்நிலையில் முறையாக நடந்து கொள்ளவில்லை? மற்றும் இந்தக் கணிப்புகளைப் பொருட்படுத்தாமல் இருந்தது? இது தொடர்பில் இன்றுவரையிலும் பிரச்சினை காணப்படுகின்றது.

இந்தப் பேரழிவிலிருந்தேனும் பாடங்களைக் கற்றுக்கொண்டு, குறிப்பாக இடம்பெயர்ந்துள்ளோரை பாதுகாப்பான பகுதிகளில் மீள்குடியேற்றுவது முக்கிய விடயமாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரங்களைப் பெற்றுக் கொடுத்து, வருமான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின்வாழ்க்கையைமீட்டெடுப்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தை நோக்கி நாம் நகர வேண்டும்.

எமது நாட்டில் வாழும் உரிமையானது அடிப்படை உரிமைகளில் பிரதானமான ஒன்றாகும். மக்களின் இந்த அடிப்படை உரிமையைப் பாதுகாக்க இந்த ஆளும்தரப்பு தவறிவிட்டது. எதிர்காலத்திலேனும்இதுபோன்ற இடர்களை எதிர்கொள்ள முறையான வேலைத்திட்டமொன்று எம்மிடம் காணப்பட வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# கடும் மின்னல் தாக்கம் குறித்து 3 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு கடும் மின்னல் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்தோடு குறித்த மாவட்டங்களில் சில இடங்களில் பலத்த மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாகப் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் சேதங்களைக் குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**காலநிலை**

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பல சந்தர்ப்பங்களில் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டைமற்றும்மொனராகலைமாவட்டங்களிலும்அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை 'தித்வா' புயலால் தொடர்ந்தும் 194 பேர் காணாமல் போயுள்ளதோடு, 640 பேர் உயிரழந்துள்ளனர். இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கையும் குறைவடைந்து செல்கிறது. அந்த வகையில் நேற்று மாலை வரை 25 879 குடும்பங்களைச் சேர்ந்த 83 ,361 பேர் 845 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 400, 123 குடும்பங்களைச் சேர்ந்த 1,398, 036 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 108 ,638 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு, 5,794 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# அரசுத் தலைவரின் ஆலோசகருடன் அமெரிக்கத் தூதுவர் நேற்றுப் பேச்சு

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும், அரசுத் தலைவரின் விஞ்ஞானமற்றும்தொழில்நுட்பசிரேஷ்ட ஆலோசகர் பேராசிரியர் கோமிகா உடுகமசூரியவுக்கும் இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்தில் இடம்பெற்றது.

'தித்வா'சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளித்தல், இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் இலங்கை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள 'தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கொள்கை' ஆகியவை தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த விடயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுத்தக்கூடிய திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. மேலும், இலங்கைக்கு அமெரிக்க முதலீடுகளை ஈர்ப்பதற்கானநடவடிக்கைகள்தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அத்துடன், 'தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கொள்கையின்' கீழ், உயர்கல்வி, தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் போன்ற நவீன துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளும் ஆராயப்பட்டன.

இலங்கையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயல்முறையை வலுப்படுத்துவதன் மூலம் அமெரிக்க சந்தைக்குள் நுழைவதற்கான புதிய வாயில்களைத் திறக்க முடியும் என்று சுட்டிக்காட்டிய அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இரு நாடுகளுக்கும் இடையேயான தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான உறவுகளை மேம்படுத்துவதற்கு ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

# சிங்கப்பூர் 1 லட்சம் டொலர் உதவி

பேரிடரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவும்நோக்கில்சிங்கப்பூர்செஞ்சிலுவைசங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும்மனிதாபிமானநிதிசேகரிப்புக்கு 100,000 டொலர்கள் (129,000 சிங்கப்பூர் டொலர்கள்) நிதியை நன்கொடையாக வழங்கவிருப்பதாக சிங்கப்பூர் ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு இடர்ங்களில் சிக்கிப்பலநூற்றுக்கணக்கானோர்பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் எனப்பல்வேறுதரப்பினரும்பலவழிகளில்இலங்கைக்கு உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அந்த வகையில் பேரிடரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவும் நோக்கில் இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதாபிமான நிதி சேகரிப்புக்கு 100,000 டொலர்கள் (129,000சிங்கப்பூர்டொலர்கள்)நிதியைநன்கொடையாக வழங்கவிருப்பதாக சிங்கப்பூர் அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஆதரவளிக்கும் வகையில் 50,000 சிங்கப்பூர் டொலரை வழங்குவதாக சிங்கப்பூர் செஞ்சிலுவை சங்கத்தினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாகவே இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக நேற்று முன்தினம் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை பேரிடரினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் உள்ளிட்ட பாதிப்புக்கள் தொடர்பில் தமது கவலையை வெளிப்படுத்தி சிங்கப்பூர் அரசுத் தலைவர் தர்மன் ஷண்முகரத்னம் மற்றும் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோர் முறையே அரசுத் தலைவர் அநுரகுமாரதிசாநாயக்கமற்றும்வெளிவிவகார, வெளிநாட்டுவேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறைஅமைச்சர் விஜித்த ஹேரத் ஆகியோருக்கு அனுதாபக்கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர்.




புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.12.2025இல் வெளியிடப்பெற்றது